# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.

தொலைபேசி : 044- 22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.

முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**முறையீட்டு மனு எண். 150/நகராட்சி/2018**

**நாள் : 01/10/2018**

**திரு G. ஸ்ரீராமன்,**
**பூவிருந்தவல்லி.** – **முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையர்,**
**பூவிருந்தவல்லி.** – **எதிர் மனுதாரர்**

திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி நகராட்சி, மாறன் நகர் அனெக்ஸ், பிளாட் எண்.4–B, 13/37 கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு G. ஸ்ரீராமன் அவர்களின் 02.07.2018 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 150/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் முறையீடு சம்பந்தமாக பூவிருந்தவல்லி நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் விசாரணையின்போது முறையீட்டு மனுதாரர் அளித்த வாக்குமூலம் ஆகியவை பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி நகராட்சி, மாறன் நகர் அனெக்ஸ், பிளாட் எண்.4–B, 13/37 கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு G. ஸ்ரீராமன் என்பவர், தான் குடியிருக்கும் மேற்குறிப்பிட்ட வீட்டிற்கு 31.03.2017 அன்று சொத்துவரி செலுத்திய போது, பிளாட் எண். 4 B, கோபால் நகர், பூவிருந்தவல்லி என தவறாகக் குறிப்பிட்டு இரசீது வழங்கப்பட்டுள்ளது என்றும், எனவே, சம்பந்தப்பட்ட வீட்டிற்கான சொத்துவரி விதிப்பில் மேற்குறிப்பிட்ட மாறன் நகர் முகவரியினை சொத்துவரி விதிப்பில் குறிப்பிடும் வகையில் உரிய திருத்தங்களைச் செய்ய ஆணையிடக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் முறையீடு சம்பந்தமாக நகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டது. 2008–2009 –ஆம் ஆண்டு முதல் 2017–2018–ஆம் ஆண்டு வரை பல ஆண்டுகளாக நிலுவை வரியினை செலுத்தப்படாத 010/005/00389 எண்ணிட்ட வரிவிதிப்பு உள்ள வீட்டிற்கு, 31.03.2017 அன்று அரையாண்டு ஒன்றிற்கு ரூ.422/–வீதம் சொத்துவரி செலுத்தப்பட்டதென்றும், இந்த சொத்துவரி 300 சதுர அடி பரப்பளவு உள்ள வீட்டிற்கான தொகை என்று நகராட்சி ஆணையர் குறிப்பிட்டுள்ளார். எனினும், பூவிருந்தவல்லி, மாறன் நகர் அனெக்ஸ், பிளாட் எண். 4–B, 13/37 கதவு எண்ணுள்ள வீட்டின் தரைதளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளம் ஆக மொத்தம் 2710 சதுர அடி உள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும், முறையீட்டு மனுதாரர் 31–03.2017 அன்று செலுத்திய சொத்துவரிக்கு வழங்கப்பட்ட இரசீது கோபால் நகரில் உள்ள வீட்டிற்கான இரசீது என்றும், மனுதாரரிடம் உரிய ஆவணங்கள் பெற்று பரப்பளவுக்கு ஏற்றாற்போல் சொத்துவரி நிர்ணயம் செய்து உரிய முகவரியுடன் கூடிய இரசீது வழங்கப்படும் என்றும் நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

3. முறையீட்டு மனுதாரரிடம் 05.09.2018 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. 31.03.2017 அன்று சொத்துவரி செலுத்திய போது கோபால் நகர், பூவிருந்தவல்லி எனத் தவறாக இரசீது வழங்கப்பட்டுள்ளதென்றும் ஆனால், உண்மையில் மாறன் நகர் அனெக்ஸ் என இருக்கவேண்டும் என்று விசாரணையின்போது தெரிவித்தார். தனக்கு பூவிருந்தவல்லி நகரில் வேறு வீடு எதுவும் இல்லை என்றும், மாறன் நகர் அனெக்ஸ்ஸில் உள்ள வீட்டிற்கு சொத்துவரி பெயர்மாற்றம் செய்து தர ஆணையிடுமாறும் கேட்டுக்கொண்டார்.

4. முறையீட்டு மனுதாரர் திரு G. ஸ்ரீராமன் என்பவர் பூவிருந்தவல்லி, மாறன் நகர் அனெக்ஸ்13/37 கதவு எண்ணிட்ட முகவரியில் வசித்து வருகிறார் என்பதற்கான குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அட்டை ஆகிய ஆவணங்களின் நகல்களை சமர்ப்பித்துள்ளார். மேலும், திரு G. ஸ்ரீராமன் பெயரில், கதவு இலக்கம் எண். 4 B, மாறன் நகர் எனக் குறிப்பிட்டு, 10581 எண்ணிட்ட வரிவிதிப்பிற்கு2002–ஆம் ஆண்டு முதல் 2008–ஆம் ஆண்டு வரை சொத்துவரி செலுத்தியதற்கு 23.08.2002, 11.04.2005 மற்றும் 03.04.2008 ஆகிய நாட்களிட்ட இரசீது எண்கள் முறையே 60119,37585 மற்றும் 1489 வழங்கப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்டுள்ள இரசீதுகளில் 4–B, மாறன் நகர் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், 10581 எண்ணிட்ட பழைய சொத்துவரி விதிப்பிற்கு 31.03.2017 அன்று சொத்துவரி செலுத்தியபோது 010/005/00389 எண்ணிட்ட புதிய சொத்துவரி விதிப்பு எண் வழங்கப்பட்டு வரி வசூலிக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட நாளில் சொத்துவரி செலுத்தியபொழுது வழங்கப்பட்ட கணினி இரசீதில் 4–B, மாறன் நகர் என்பதற்கு பதிலாக 4–B, கோபால் நகர் என தவறுதலாகக் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது. பூவிருந்தவல்லி நகராட்சி, மாறன் நகர், மனை எண். 4 B–இல் இக்கட்டடம் கட்டுவதற்கு 1999–ஆம் ஆண்டு கட்டிட அனுமதி வழங்கப்பட்டு 10581 எண்ணிட்ட சொத்துவரி விதிப்பில் வரி விதிப்பும் செய்யப்பட்டுள்ளது. மேலும், மேற்குறிப்பிட்ட சொத்து வரி விதிப்பு எண்ணுள்ள கட்டடம் பின்பு கூடுதலாக விரிவாக்கம் செய்யப்பட்டு கட்டப்பட்டுள்ளது. எனினும், கூடுதலாகக் கட்டப்பட்ட கட்டிட பரப்பினைக் கண்டறிந்து பரப்பளவிற்கேற்றாற்போல் விரிவாக்கம் செய்யப்பட்ட கட்டிடத்திற்குக் கூடுதல் சொத்துவரி விதிக்கப்படவில்லை எனவும் அறிய நேரிடுகிறது. எனவே, 4– B, மாறன் நகரில் உள்ள முறையீட்டு மனுதாரரின் குடியிருப்புக் கட்டிடம் எந்தெந்த காலகட்டத்தில் கூடுதலாகக் கட்டப்பட்டது மற்றும் அனுமதி பெற்று கூடுதலாக கட்டப்பட்டுள்ளதா போன்ற விவரங்களை கண்டறிந்து கட்டிட பரப்பளவிற்கு ஏற்றாற்போல் காலவரையறை முறையில் சொத்துவரி நிர்ணயம் செய்து நிலுவைத் தொகையை வசூலிப்பதுடன், சொத்துவரி பதிவேடு மற்றும் கணினி பதிவுகளில் மனுதாரரின் வீட்டின் சரியான முகவரியைக் குறிப்பிடுமாறும் பூவிருந்தவல்லி நகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

2018– ஆம் ஆண்டு, **அக்டோபர்** திங்கள், 1–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

17/10/2018

செயலாளர்.

பெறுநர்

1. **G. ஸ்ரீராமன்,**
   **பிளாட் எண். 4 B,**
   **கதவு எண்.13/37, மாறன் நகர் அனெக்ஸ்,**
   **பூவிருந்தவல்லி,**
   **சென்னை – 600 056.**

2. **நகராட்சி ஆணையர்,**
   **பூவிருந்தவல்லி நகராட்சி,**
   **பூவிருந்தவல்லி.**

**நகல்** : முறைமன்ற நடுவரின் **நேர்முக எழுத்தர்**
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
**இ.கோ. / உதிரி**